**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A.No.01/2025**
**in**
**O.S.No.53/2022**

S.வள்ளி ...மனுதாரர்/1 ம் பிரதிவாதி

/எதிர்/

1. S.சரவணன் ....வாதி/1 ம் எதிர்மனுதாரர்
2. S.ராதா
3. P.இராமகிருஷ்ணன் ... 2, 3 எதிர்மனுதாரர்/2, 3 பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 19.01.2026 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.முருகவேல்ராஜன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.தமிழ்செல்வம் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் மனுதாரருக்கு எதிராக கடந்த 19.06.2023 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ட உத்தரவை ரத்து செய்து வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி கட்டளை 9, விதி 7 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் வழக்கின் 1 ம் பிரதிவாதி என்றும், மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை

தாக்கல் செய்ய கடந்த 19.06.2023ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், அன்றையதினம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை தொடர்பு கொண்டு தாவா வழக்கில் மனுதாரர் தரப்பு எழுத்துமூலமான எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாததால் போய்விட்டது என்றும், வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல தெய்வாதீனமாக ஏற்பட்டதாகவும், தாவா வழக்கில் மனுதாரருக்கு எதிராக கடந்த 19.06.2025ம் தேதி ஏற்படுத்திய ஒருதலைபட்சமான உத்தரவினை ரத்து செய்து தாவா வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>2, 3 எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.</u>

மனுவில் கூறப்பட்டுள்ள காரணங்கள் அனைத்து மறுக்கப்படுகிறது என்றும், வழக்கானது விசாரணைக்கு எடுக்கப்பட்டு சாட்சி விசாரணை நடந்து வரும் நிலையில் மனுதாரர்/1ம் பிரதிவாதியின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், வாதியும், மனுதாரர்/1ம் பிரதிவாதியும் வஞ்சகூட்டுடன் செயல்பட்டு வருகின்றதாகவும், வாதியின் வழக்கிற்கு ஆதரவாகனவே மனுதாரர்/1ம் பிரதிவாதி மனுவை தாக்கல் செய்வதாகவும், 2, 3 பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் தங்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சொல்லப்பட்டுள்ளது என்றும், மனுவானது அனுமதிக்கப்படும் பட்சம் மனுதாரர் வாதிக்கு ஆதரவாக வழக்கில் செயல்படுவதால் தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய கடந்த 19.06.2023ம் தேதி

வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், அன்றையதினம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை தொடர்பு கொண்டு தாவா வழக்கில் மனுதாரர் தரப்பு எழுத்துமூலமான எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்களை மறுத்தும், 1ம் பிரதிவாதி வஞ்சக்கூட்டாக செயல்படுவதாக ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பினை வழக்கினை தரப்பினராக சேர்த்து மேல்நடத்துவதால் எதிர்மனுதாரர்/வாதி தரப்பிற்கு எவ்வித பாதகமும் ஏற்படப்போவதில்லை என்பதையும், மேலும் மனுவுடன் எதிர்வழக்குரையும் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும் மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகின்றது.

**முடிவாக, மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 23.01.2026 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.01.23 15:31:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:

இல்லை.

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:

இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.01.23 15:31:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.